# விளம்பரம்™

VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc

*என்னுடைய சேவையே, எனது வெற்றி



நதி 09 - பாலம் 15 AUGUST 01, 1999



❄ 'Blue Jays' வெற்றிப் பாதையில்? (பக். 6)

❄ வீட்டின் விலை தொடர்ந்து அதிகரிக்குமா? (பக். 13)

❄ பெற்றோர் பிள்ளைகளை அடித்து வளர்க்கலாமா? (பக். 13)

❄ பெண்கள் உலகின் கண்களா ? (பக். 15)

❄ ஒரு செயலை தள்ளிப்போடுவதால், மன அழுத்தம் அதிகரிக்குமா! (பக். 2)

❄ குறிப்பிட்ட வேகத்தை விட , குறைந்த வேகத்தில் வாகனம் ஓடுவது குற்றமா? (பக். 13)

❄ நடிகையர் திலகமா, நடிகர் திலகமா சிறந்த நடிகர்? (பககம் 7)

❄ பூமி தன்னைத் தானே சுற்றுகிறதா? சூரியனைச் சுற்றுகிறதா? (பக்கம் 9)



**இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்**

**சபோனாவிற்கு!**

*Sabona & Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

*Markham / Eglinton*

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

☞ உள்ளத்தைத் தூயதாக்குதலே நல்லோர் செயல். நேர்மையும், அமைதியும், புனிதமும் வடிவெடுத்திரு.

☞ ஒவ்வொரு கணப்பொழுதையும் நன்கு பயன்படுத்துபவன் அறிவையும் ஆக்கத்தையும் பெறுகிறான்.

☞ உள்ளத்தினுள்ளே உள்ள கோணல் வெளி உலகில் தோல்வியாகத் தோன்றுகிறது.

☞ நாம் தாக்கப்படும் பொழுது நமது தன்மை தோற்றத்துக்கு வருகிறது.

☞ பூவிலிருந்து பிஞ்சு உண்டாகும் பொழுது பூவின் இதழ்கள் தாமே விழுந்து விடுகின்றன; தெய்வீகம் உன்னிடம் வளரும் போது மானுடச் சிறுமைகள் தாமே அகன்று விடுகின்றன.

## உலகக் கோலங்கள்

### குவாற்றமாலா (Guatemala)

மத்திய அமெரிக்காவில் உள்ள நாடுகளில் ஒன்றாகும். மெக்சிக்கோ (Mexico), பீலிஷ் (Belize), கொண்டுரஸ் (Honduras), எல்சல்வடோர் (Elsalvador) ஆகியன எல்லை நாடாகவும், பசுபிக் சமுத்திரம் ஒரு பகுதி எல்லையாகவும், கொண்டரஸ் வளை குடா கடல் (Gulf of Honduras) இன்னொரு பகுதி எல்லையாகவும் உள்ளது. வெப்ப வலய நாடாகும்.

**இதன் பரப்பளவு:** 41,865 ச. மைல்

**மக்கள் குடித்தொகை:** 9,710,000 (1992ம் ஆண்டு புள்ளி விபரப்படி)

**தலைநகரம்:** "குவாற்றமாலா" நகரம் (நாட்டின் மத்தியில் உள்ளது)

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கம், கிறிஸ்தவம்

**பேசும் மொழி: ஸ்பானிஷ்:** 40% மேலும் திரிவடைந்து உருவாக்கப்பட்ட பதினெட்டு வகையான நாட்டுபுற பாஷைகள்.

**சுதந்திரம் அடைந்த தினம்:** செப்ரெம்பர் 18, 1821 ஸ்பெயின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் அடைந்து 1985ல் அரசியல் அமைப்புள்ள இறைமை நாடாக உருவாகியது.


(தொடர்ச்சி 10ம் பக்கம்)


## உன்னை அறிந்தால்

**"தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் தேடுங்கள் கிடைக்கும்"** -யேசுபிரானின் வாக்கு வாழ்க்கையில் எதுவுவே கேட்காமல் கிடைப்பதில்லை, கிடைக்கப்போவதுமின்லை. மனிதன் எதனை அடைய விரும்புகிறானோ அல்லது எவ்வாறு வரவிரும்புகிறானோ, அதனை நாங்கள் தேடவேண்டும் அல்லது அதற்கு உருவம் கொடுக்க வேண்டும். பலசெயல்கள் பல சந்தர்ப்பங்களில் ஒரு தடவையில் சரிவருவதாக இல்லை. இதனையே **'முயற்சி திருவினையாக்கும்"** எனக் கூறியுள்ளார்கள். துன்பத்தைக் கண்டு துவண்டு விடாதே எனவும் கூறலாம். வாழ்க்கையில் மனிதன் பெறும் அனுபவம் அல்லது பூரணம் அடைவது தோல்வியில் தவிர, வெற்றியில் அல்ல. பிரச்சினை அணுகும் வாழ்விலே விரக்தி ஏற்பட வாய்ப்புகள் உண்டு. பிரச்சினைகள் தொடர தொடர மனம் பூரணம் அடைகின்றது. வாழ்வில் விரக்தி ஏற்படாத மனிதனே இல்லை எனக் கூறலாம். அக்கரைப் பச்சைபோல் மற்றவனிற்கு பிரச்சினை இல்லை என மனம் அங்கலாய்ப்பது இயல்பே. **'வீட்டிற்கு வீடு வாசல்படி'** இதுவே இயற்கை அல்லது நியதி. ஒரு ஆங்கில அறிஞர் கூறிய வாக்கு " தோல்விகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க வெற்றி அண்மிக்கின்றது. தோல்வியைக் கண்டு துவளாதே, வெற்றியின் ஆரம்பம் அதுவே. ***நெற்றிக்கண்ணன்***


**விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM**



**SINGAPORE CELLULAR**

Bell Mobility

$50.+Tax per Month

CANTEL

மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE
Call Display, Call Waiting FREE, Per Second Billing
For more Information: சத்தி (416) 745-2378

**Hotline: (416) 980-1234**

**துரித பணமாற்றுச் சேவை**



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



**சிவாகம கிரியா பீடம்**

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

**சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr. , Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978



# அறிவும் ஆக்கமும் (38)

- விஜே குலத்துங்கம்

சென்ற இதழில் நேரத்தின் முக்கியத்துவத்தையும் ஒரு நாளில் எங்களுக்கு கிடைக்கும் நேரத்தை அதிகரிக்கலாம் என்று பார்த்தோம். அதாவது நேரத்தை வீணான நடவடிக்கைகளில் செலவழிக்காமல் மீதப்படுத்தி அதை பிரயோசனமான வழியில் செலவழிக்கலாம் எனப் பார்த்தோம்.



இந்த இதழில் கிடைக்கும் நேரத்தை எவ்வாறு திறமையான நிர்வாகத்தின் மூலம் அதனால் கிடைக்கும் பிரதிபலனை அதிகரிக்கலாம் எனப் பார்ப்போம். இந்த நேர நிர்வாகத்தை அல்லது நேரத்தை திறமையான முறையில் கையாளும் முறையை Time Management எனக் கூறுவார்கள். எவர் இந்த Time Management ஐ சரிவர செய்கின்றார்களோ, அவர்களே வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவார்கள். அதாவது நேரத்தை சரிவர கையாளுவதால், குறைந்த நேரத்தில் மிகக்கூடிய பிரதிபலனை எதிர்பார்க்கலாம்.

நேரத்தை கையாளுவதில் மிக முக்கியமானது என்னவெனில், முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய விடயங்களை தெரிவு செய்து, அதற்குரிய நேரத்தை ஒதுக்குவது ஆகும். அதாவது ஒரு நாளில் ஒரு கிழமையில் ஒரு மாதத்தில் என்ன விடயங்களை கட்டாயம் செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். பின்னர் ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய விடயங்களை குறித்துக் கொள்ள வேண்டும். இது மிகவும் ஒரு முக்கியமான விடயம். இதை பலர் செய்வதில்லை. ஆரம்பத்தில் இதைப் பழக்கத்தில் கொண்டுவருவது கஷ்டம் என்றாலும், பழகினால் மிகவும் நல்ல பலனை அளிக்கும். இதைக் காலையில், காலை உணவை அருந்தும் போதோ அல்லது கோப்பி குடிக்கும் போதோ ஒரு சிறிய காகிதத்தில் அந்த நாளில் செய்யப்பட வேண்டிய விடயங்களை குறித்துக் கொள்ளவேண்டும். முக்கியமான விடயங்களை முதலிலும், முக்கியமற்ற விடயங்களை கடைசியிலும் குறித்துக் கொள்ள வேண்டும். பஸ்ஸில் போகும்போதோ, சப்வே யில் போகும்போதோ இந்த விடயங்களை குறித்துக் கொள்ளலாம். இயலுமானால் விடயங்கள் செய்யப்பட வேண்டிய நேரத்தையும் குறித்துக் கொள்ள வேண்டும்.

செய்யப்பட வேண்டிய விடயங்களை தீர்மானிக்கும் போது தவிர்க்கப்பட வேண்டிய முக்கிய விடயம் "ஒத்திப்போடுதல்" ஆகும். மனிதரின் இயற்கையான குணம் என்னவெனில் கஷ்டமான விடயங்களையும், தங்களுக்கு பிடிக்காத விடயங்களையும் ஒத்திப் போடுவதுதான். ஆனால் இப்படியான விடயங்கள் செய்யப்படாமல் இருக்கும் பொழுது, அவை எப்போதும் மனதை உறுதிக் கொண்டு மன அழுத்தத்தைக் கொடுக்கும். இதனால் மற்ற விடயங்களும் பாதிப்படையும். எனவே முடிந்த அளவு விடயங்களை ஒத்திப்போடாமல் அன்றன்றே செய்து முடிக்க வேண்டும்.

எல்லா விடயங்களையும் எங்கள் தலைமேல் போட்டுக் கொள்ளாமல், மற்றவர்களால் செய்யப்படக் கூடிய இலகுவான விடயங்களை அவர்களிடம் விட்ட விடவேண்டும். இது மனைவியாக இருக்கலாம், பிள்ளைகளாக இருக்கலாம் அல்லது கூட வேலை செய்பவர்களாக இருக்கலாம். சிலவிடயங்கள் இலகுவான-தாகவும் ஆனால் கூடிய நேரத்தை எடுப்பனவையாகவும் இருக்கலாம். எனவே ஆற்றல் கூடியவர்கள் இலகுவான விடயங்களில் தங்களின் பொன்னான நேரத்தை செலவழிக்காமல், அதை உரியவர்களிடம் கொடுக்க வேண்டும். இதை ஆங்கிலத்தில் "delegate" என்று கூறுவார்கள்.

வீணான தொந்தரவுகளை தவிர்ப்பதும் மிகவும் அவசியம். இதனால் நீங்கள் ஈடுபட்டிருக்கும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தலாம். முக்கயமாக தேவையில்லாத தொலைபேசி அழைப்புகள். நீங்கள் தொந்தரவு செய்யப்படக்கூடாது என நினைக்கும் காரியங்களில் ஈடுபடும்போது, தொலைபேசியை "தொலைபேசி ஒலிப்பதிவு" Voice Mail Recording க்கு செல்ல விடவேண்டும். இந்த விடயத்தில் Voice Message அல்லது "Answering Machine" போன்ற கருவிகள் முக்கிய பங்கை வகிக்கின்றது. தொலைபேசியில் அழைக்கின்றவர்கள் முக்கியமான விடயமென்றால், ஒலிப்பதிவில் தங்களது செய்தியை பதிவு செய்வார்கள். நீங்கள் சற்று ஒய்வு எடுக்க நினைக்கும்போது, பதிவு செய்யப்பட்ட தகவல்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

ஆராய்சிகளின் தகவல்களின்படி ஒரு மனிதன் 80 வீதமான விடங்களை தனது நேரத்தின் 20% த்தில் செய்து முடிக்கின்றான். மிகுதி 80 வீதமான நேரத்தில் 20% வீதமான விடயங்களை செய்கின்றான். அனவே நேரத்தை வீணாக செலவழிக்கின்றார்கள் எனப் புரிகின்றது. இதன் முக்கிய காரணங்களில் ஒன்று வீணான தொந்தரவுகள், மற்றது எங்களின் உடல் நிலைமை. எங்கள் உடல் சில நேரங்களில் சுறுசுறுப்பாக இயங்கும். சில வேளைகளில் சோர்வாக இருக்கும். அதிகமாக காலையில் உடல் சுறுசுறுப்பாக இருக்கும். அதிகமானோர் காலை உணவு உண்பதில்லை. காலை உணவு மிகவும் அவசியம். காலையில் உடல் திறனாக இயங்குவதற்கு சக்தி அவசியம். ஆனால் மத்தியானம் அதிகளவு உணவு உட்கொண்டால், சோர்வடைந்து நித்திரை வரும். அத்துடன் மத்தியான உணவின் பின்னர் உடல் சிறிது சோர்வாக இருக்கும். எனவே சிறியளவான உணவை உட்கொண்டு, மதிய உணவு இடைவேளையில் ஓய்வெடுத்தால் பின்னர் சுறுசுறுப்பாக இயங்கக் கூடியதாக இருக்கும். ஒரு நாளில் இடைவேளைகளை எடுப்பது மிகவும் அவசியம், மத்தியான இடைவேளையும் மேலும் காலையிலும், மாலையிலும் 15 நிமிட இடைவேளை எடுப்பது அவசியம்.

எனவே உங்களுக்கு எந்த நேரம் அதிகளவு சக்தியை கொடுக்குமோ, அந்த நேரத்தில் முக்கிய விடயங்ளை செய்து முடிக்க வேண்டும். விடயங்களை குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிப்பது மிக அவசியம். உதாரணமாக கலைவிழாக்களுக்கு செல்பவர்களும் பிந்தியே செல்வார்கள், விழா நட்த்துபவர்களும் நேரத்திற்கு ஆரம்பிக்கமாட்டார்கள். எனவே விழா பிந்தியே முடியும். இதனால் பலரின் பல மணித்தியாலங்கள் வீணாகின்றன. ஐந்து பேர் கூடும் கூட்டத்திற்கு, ஒருவர் பிந்திச் செல்வதால் கூட்டம் ஆரம்பிக்காமல், நேரத்திற்கு வந்த மற்ற 4 பேரின் நேரமும் வீணாகின்றது. எனவே நாங்கள் நேரத்தைத் தகுந்த முறையில் கையாளுவதால், எங்களின் நேரத்தை மாத்திரம் அல்லாது மற்றவரின் நேரத்தையும் மிச்சப்படுத்தலாம். எவர் தங்களின் நேரத்தை சரிவர நிர்வகிக்கின்றார்களோ அவர்களே வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள்.

****************************************************

*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


10 வருடங்களாக தமிழர் மத்தியில்

**யோகாஸ்**

☎ :(416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 98

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | 2 |
| | ■ | ■ | ■ | ■ | 3 | ■ | |
| 4 | | | 5 | | ■ | | 6 |
| | ■ | ■ | | ■ | 7 | ■ | |
| 8 | | | | | | ■ | |
| | ■ | ■ | | ■ | | ■ | ■ |
| ■ | ■ | | ■ | ■ | 9 | | 10 |
| 11 | | 12 | | | | ■ | |

**இடமிருந்து - வலம்**

1. பாலைவனக் கப்பல் எனப்படும் மிருகம்
2. பவனி வருதல் (வல-இட)
3. இலையான்
4. கப்பல் தரிக்குமிடம்
6. மிதிலையின் மைதிலி (வல-இட)
8. இந்தசெடியும் இதன் விதையும் மருந்துகாக உதவும்
9. சோறு வடித்த நீர்
11. மாலையில் செந்நிறமாக மாறுவது

**மேலிருந்து கீழ்**

1. இணங்கு
2. அலட்சியம்
5. காதணி
7. நான்கு யுகங்களில் ஒன்று
10. தலைமுடி
12. அடைப்பு நீக்கு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் August 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உ | ட | ந் | தை | ■ | பு | த | ர் |
| த் | ■ | ■ | ■ | ■ | ■ | வி | ■ |
| தி | க் | கு | மு | க் | கா | டு | ■ |
| யோ | ■ | ■ | கூ | ■ | ணி | ■ | ரி |
| க | ள் | ள | ர் | ■ | ■ | ப | தி |
| ம் | ■ | ■ | த் | ■ | பு | ண் | மா |
| ■ | இ | ■ | த | வ | ம் | ■ | ன் |
| வி | டை | ■ | ம் | து | வ | ழு | மு |

**#97இல் வெற்றி பெற்றோர்**

1) L. பத்மநாதன், Toronto
2) N. டிலாணி, North York


இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்

**YOGAS**
**615 KENNEDY RD.**
**Scarborough, Ont.**

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்பு கணித்தல்
- பலன் பாத்தல்
- எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்



☎: 299-8361

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT** தமிழில் இலவச ஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) =Toronto Ont. M9N 1X7

**RUBAN PEST CONTROL**

**Complete Elimination of Roaches & Mice**

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், கடைகள் அனைத்திலும் பூச்சி, எலிகள் தொல்லையா? கவலையை விடுங்கள். அறவே ஒழிக்கஅழையுங்கள்




No Spraying
No Smelling
No Moving

காந்தன் :(416) 283-9538

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)

☎ [416] **285-4998**



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



*>Railing > Fencing >Welding*

Free Estimates
Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


# தமிழ் மக்களுக்காக தமிழ் வியாபாரிகளும் விற்பனையாளர்களும் நன்மை செய்ய முடியுமா?



கடந்த விளம்பர இதழில் தமிழ் வியாபாரிகளிடம் தமிழ் மக்கள் பொருட்களை வாங்குவது பற்றி எழுதியிருந்தேன். இதனை வாசித்து பல வாசகர்கள் என்னுடன் தொடர்புகொண்டு சரிபிழைகளை எடுத்துக் கூறினர். அவர்களை மனதார வரவேற்க்கிறேன். நான் எப்போதுமே துணிந்து சரிபிழைகளை எடுத்துக் கூறுவதை தான் வரவேற்ப்பவன். அவர்களின் சில கருத்துகளை கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒரு வாசகன் தனக்கு பல்லில் பிரச்சனை இருந்ததாகவும் அதை ஒரு தமிழ் பல்வைத்தியரிடம் காட்டியதாகவும் பல தடவைகள் சென்று அந்த பல் வைத்தியரிடம் தான் ஏராளமான பணத்தையும் செலவு செய்தும் தனது பிரச்சனை தீராத காரணத்தால் தான் ஒரு வேறு இன பல்வைத்தியரிடம் சென்றதும் ஒரு தடவையிலே குணமாகியதாகவும் சொன்னார். தமிழ் பல் வைத்தியர் தன்னிடம் பணம் கறப்பதற்காகவே அப்படிச் செய்திருப்பார் என்று அந்த வாசகர் வினா எழுப்பி இருந்தார். அப்படியான ஒரு சில பல்வைத்தியர் போன்றோரால் எல்லா தமிழர்களும் கூடாதவர்கள் என்று சொல்வதற்க்கில்லை. நானும் ஒரு தமிழ் பல் வைத்தியரிடம் தான் செல்வது உண்டு. எனது அறிவுக்கு எட்டிய வரையில் நியாயமான முறையில்தான் அந்த பல் வைத்தியர் என்னுடன் நடந்து கொண்டு இருக்கிறார். நான் எனது பல் வைத்தியரிடம் எந்த பிழையும் கண்டு கொள்ளவில்லை. எனது வாசகரின் பல் வைத்தியர் போன்றோர் பலதுறைகளிலும் உள்ளனர்.. தங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தை முழுக்க பயன்படுத்தி உடன் பணத்தை சம்பாதிக்க நினைப்பவர்களாக அவர்கள் செயற்படுவது உண்டு. அப்படியானவர்கள் ஒன்றை மனதில் கொள்ளவேண்டும். எம்மக்கள் மத்தியில் உங்களைப் பற்றிய நல்ல பெயர் இருந்தால் நிச்சயமாக நீங்கள் ஒருவரிடம் சம்பாதிப்பதை விட கூடுதலாக சம்பாதிக்க முடியும்.

நான் ஒரு வாகன விற்பனையாளராக பணிபுருகிறேன். எம்மவர்கள் என்னிடம் வரும்போது Dealer Cost ஐ விட $500 கூட்டி விற்க்கிறேன். விளைவு எனக்கு கிடைப்பது பலபேரினதும் வியாபாரம். அதைவிட எனது சமூகத்திற்கு என்னால் குறைந்த விலையில் வாகனத்தை பெற்றுக் கொடுக்க முடிந்ததே என்ற மனநிலை. உனது சமூகம் உணர்ந்து என்ன செய்தது என்பதை விட தமிழ் சமூகத்திற்கு உன்னால் என்ன நன்மை கிடைத்தது என்பதைப்பார். ஆகவே தயவு செய்து தமிழ் வியாபாரிகளோ ஆயினும் சரி முகவர்களாயினும் சரி சட்டத்தரணிகளாயினும் சரி வைத்தியர்களாயினும் சரி உங்களால் இயன்ற வரை நம் இனத்திற்குக் நியாயமான முறையில் சிறந்த சேவையை வழங்குவார்கள் என எதிர்பார்ப்போம்.

அதேவேளையில் எனக்கு தெரிந்த ஒருவர் நடந்து கொண்ட கேவலமான செயலையும் இங்கு குறிப்பிட வேண்டும். அவர் ஒரு வீடுவாங்குவதற்காக 6 மாதங்களாக ஒரு தமிழ் விற்பனையாளரை உபயோகித்தார். திடீரென ஒரு சீன விற்பனையாளர் மூலம் ஒரு நாளில் வீடு வாங்கிவிட்டார். அவரைப் போன்ற ஈன ஜென்மமான வேலைகளை மற்றை தமிழ் சகோதர சகோதரிகள் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஆறுமாதங்களாக அந்த விற்பனையாளர் இவருடன் அலைந்ததற்கு கிடைத்த காரணம் நான் கேட்ட போது கிடைத்த பதில், பேப்பரில் பார்த்தோம். சும்மா பார்க்கப் போயிருந்தோம். வீடு பிடித்திருந்தது வாங்கிவிட்டோம். ஆனால் அவர் வீடுவாங்கி 3 மாதங்கள் ஆகவில்லை. தற்போது தான் பிழைவிட்டு விட்டதாகவும் தனது சக்திக்கு மீறிய அளவில் தான்வீடு வாங்கி விட்டதாகவும் அழுகிறார். ஆறுமாதமாக கஸ்டப்பட்ட தமிழ் விற்பனையாளர் செய்தது என்னவென்றால் இவரின் சக்திக்கு உட்பட்ட வீட்டை பெற்றுக் கொடுக்க முற்பட்டதுதான். தற்போது விளங்குகிறதா ஏன் தமிழ் விற்பனையாளர் தேவை என்பது.

கனடாவில் 1½ லடசம் தமிழர்கள் இருக்கும் போது நமக்குள் ஒற்றுமை இருந்தால் எமது இனம் எப்படி முன்னேறும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

மேலதிக விபரங்களுக்கு- ***சோதீஸ்*** *Cell (416) 704 -1179*


*We are entering 5 th year service in Scarborough.*



**Better Work ... Less Money**

**N.T.E** *Auto* **Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.


**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஓட்டோ இங்.**

**AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN



# ஆரோக்கிய வாழ்வு (38)



- *N.* செல்வசோதி


## பெண்கள் அழகாக இருப்பது எப்படி?

சென்ற இரண்டு இதழ்களிலும் பெண்கள் அழகாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளின் முக்கியத்துவத்தையும் அதற்கு அவர்களின் உடல் வளத்தில் ஏற்படும் மாறுதலின் அவசியத்தையும் இதற்கு சில குறிப்பிட்ட யோகாசன முறையின் குறிப்பிடத்தக்க பங்கினையும் அறிந்து கொண்டோம்.


இந்த அத்தியாயத்தில் அழகாக இருக்க வேண்டுமென்று அதன் நோக்கத்தை அடையத் துடிக்கும் பெண்களுக்கு ஒரு முக்கியமான வேண்டுகோள் இங்கே.

பொதுவாக பெண்கள் இளம் வயதில் தாங்கள் அழகாக இருக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்துவார்கள். முகத்தில் பருக்கள் வந்து விட்டாலே துடித்துப் போய் விடுவார்கள். தலைமுடி உதிர ஆரம்பித்து விட்டால் உலகமே இருண்டதைப் போல் எண்ணி கவலைப்படுவார்கள். அழகாக வளர்க்கும் விரல் நகங்கள் ஒடிவதைக் கூட அவர்கள் தாங்க மாட்டார்கள்.


ஆனால் அதே பெண்கள் திருமணத்திற்குப் பின் எப்படி மாறிவிடுகிறார்கள். வீட்டு வேலை, கணவனைக் கவனித்துக் கொள்ளுதல், குழந்தை வளர்ப்பு மற்றும் வெளிவேலைகள் போன்றவற்றால் தமது உடல் நிலையை அடியோடு மறந்து விடுகின்றனர். அதுவும் ஒரு குழந்தை பிறந்து விட்டால் கேட்கவே வேண்டாம். நாள் முழுவதும் வேலை வேலை என்று அலட்டிக் கொள்கின்றனர். திருமணமான 35 வயது நிரம்பிய பெண்களில் பெரும்பாலானோர் உடம்பு பெருத்தும், தலைமுடி கொட்டிய நிலையிலும் முகத்தில் சுருக்கம் விழுந்த நிலையிலும் காணப்படுகின்றனர்.




35 வயதிலேயே 50 வயதுபோலத் தோற்றமளிக்கின்றனர். இதற்கு காரணம் என்ன? உடம்பு தசைகளை சரியான முறையில் அசைக்காமலும், தவறான உணவுப் பழக்கங்களாலும், உடற்பயிற்சி இல்லாமையும் தான் காரணம். உடம்பை சரியாகக் கவனிக்காததாலும் முதுகெலும்புக்கு சரியான முறையில் பயிற்சி கொடுக்காததாலும் தான் இடுப்புவலி, கழுத்து வலி, முதுகுவலி போன்றவை வருகின்றன.




கழுத்துவலி போன்றவை வராமலிருக்க தைராயிடு சுரப்பி (Tiroid) கோளாறினால் கழுத்து வீங்கி விகாரமாய் தெரியாமல் இருக்க கழுத்தில் சுருக்கங்கள் விழுந்து தாடை பெருத்து அசிங்கமாகக் காணப்படாமலிருக்கவும் <u>**யோகாசனம்**</u> உதவுகிறது. சில எளிய முறையிலான கழுத்துப் பயிற்சிமூலம் அவற்றை வராமலேயே தடுக்க முடியும். முதுகெலும்பை சரியாகப் பயன்படுத்தும் ஆசனங்கள் செய்வதால் முதுகு வலி, இடுப்பு வலி வராமல் செய்ய முடியும். ஆனால் இதையெல்லாம் செய்ய எங்கே நேரமிருக்கிறது என்று புலம்புவர்களை என்ன செய்ய முடியும்? குளிக்க, தூங்க, சாப்பிட, T.V பார்க்க எல்லாம் நேரமிருக்கும் போது உடம்பைக் கவனித்துக் கொள்ள நேரமில்லையென்று சொல்பவர்களை பார்த்தால்......




குடும்பத்தில் மற்றவர்கள் நோய்வாய்ப்பட்டால் அதை குடும்பத்தலைவி கவனித்துக் குணப்படுத்தலாம். ஆனால் தலைவியே நோய் வாய்ப்பட்டால் அந்தக் குடும்பத்தைக் கவனிக்க ஆளின்றி அவதிப்படுவதைப் பார்க்கிறோம். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையமுடுயும். அதுபோல் பெண்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் வீட்டை கவனிக்க முடியும். அடுத்த தலைமுறையையும் ஆரோக்கியமாக வளர்க்க முடியும்.

எனவே ஆரோக்கயமே அழகு, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து நோயின்றி வாழ முயற்சி எடுப்பீர்கள்.

அடுத்த இதழில் பெண்கள் என்றும் இளமை பெற வழிகள் எவை என்று பார்ப்போம்.


Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்




கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484



ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ 261-6883

ஒரே உணவைச் சாப்பிட்ட நாவிற்கு புதிய ருசி

Flavoritz



Catering & Take-Out
4800 Sheppard Ave. E., Unit # 126,
TORONTO ON, M1S 4N5
☎: (416) 335-4408

திறந்திருக்கும் நேரம்: செவ்வாய் - ஞாயிறு
காலை 11:00 முதல் மாலை 10:00 வரை




இலங்கை, இந்திய மற்றும் கனடிய உணவு வகைகளில் தேர்ச்சி பெற்றவர்கள்

சகலவித நிகழ்ச்சிகளிற்குமான உணவு வகைகளை எம்மிடம் சிறிய ஓடர் முதல் பெரிய ஓடர் வரை பெற்றுக் கொள்ளமுடியும்

# முத்துக்குறள் மூன்று

ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,
பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



ஔவையார் செந்தமிழையும் முத்தமிழையும் வளர்ப்பதற்கு தம் வாழ்வை தியாகம் செய்து நம் வாழ்வை வளம்படுத்த கூறிய அறிவுரைகளில் ஒன்றுதான் இங்கே கூறப்பட்டது.

**" செய் தீ வினையிருக்க தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இருநிதியம்**
**வையத்தறும் பாவம் என்னவறின் தன்றிடார்க்கன்று**
**வெறும்பானை பொங்குமோ மேல்."**

இதன் கருத்து விரிவாக எழுததேவையில்லை. இருந்தும் பாவத்தை மனதாலும் நினையாது பழியில் நனையாது கண்ணியமாய் புண்ணியமாய் வாழப்பழகுங்கள். இயன்றளவு [illegible]யான செயல்களை செய்யாது விடுங்கள். இயன்றளவு என்ன? அணுவளவு கூட ம[illegible] உயிர்களுக்கு துன்பம் நினைக்காதீர்கள். இதையே கணியன் பூங்குன்றனார் பின்வருமாறு கூறுகிறார்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்,**
**தீதும் நன்றும் பிறர்தரவாரா,**
**நோதலும் தணிதலும் அவற்றோரென்ன**
**சாதலும் புதுவது அன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்னும் இதமே**
**முனியின் இன்னாது என்றதும் இலமே**
**மின்னொரு வானம் தண்துளி தலைஈ ஆனது**
**கல்பொழுது இரங்கும் மல்லல் பேர்பாற்று**
**நீர்வழிப்படு உம் புனைபோல் ஆருயில்**
**மறைவழிப்படு உம் என்பது திறவோர்**
**காட்சியின் தெளிந்தனம் ஆதலின் மாட்சியின்**
**எளியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே**

இந்த பாடலில் இருந்து தெளிவாக தெரிவது என்னவெனில் நாம் செய்யும் பாவத்திற்கு பொறுப்பதிகாரி கடவுளோ, காவல்துறை அதிகாரியோ இல்லை. நாமே நம் பிழைக்கு அதிகாரி.

ஆகவே அன்புள்ளங்களே அனுபவம் என்றால் என்ன? இன்பதுன்பம் என்றால் என்ன? துன்பம் துயரத்துக்கு காரணம் என்ன? என்பதை நன்கு அறிவீர்கள். நீங்கள் இக்காரணங்களை நன்கு அறிந்து உணர்ந்து எந்த உயிருக்கும் தீங்கு நினையாது வாழ்வீர்களானால் உங்கள் வாழ்வு இன்பப் பூங்காவாக மாறுவதற்கு தடையேதும் உண்டோ.

உலகத்தில் மனிதனாக பிறக்கும் ஒவ்வொருவரையும் மிகமிக உயர்ந்த மானம் கௌரவம், பண்பு, உள்ள மனிதனாக கண்டு மதித்து உயர்த்து நிறுத்தி அப்படியே வாழவேண்டும். எல்லோரையும் எல்லோரும் மதிக்க வேண்டும். யாரையும் யாரும் மிதித்து வாழக்கூடாது, என்ற உயர்ந்த தத்துவத்தை உலகிற்கு அறிவுறுத்திய உயர்ந்த உலகப்பொதுமறையும், [illegible]காட்டியுமே குறள்.

மாக்ஸ், ஏங்கல்ஸ், லிங்கன், லேனினும் காந்தியும் காணாத ஒரு பொதுவுடமைத தத்துவத்தை உலகிற்கு வழங்கினார் வள்ளுவர். ஒவ்வொரு மனிதனும் வாழவே பிறந்தவன். அவன் இறைமை, ஆளுமை, அறிவுடமை, சுதந்திரம், பொருளாதாரம், சிந்தனை, கல்வி, அரசுரிமை யாவற்றையும் பொதுவுடமையாக்கினார் வள்ளுவர். வறுமையை அடியோடு வெறுத்தவர். மனிதன் மனிதனாக [illegible] இரந்து வாழக்கூடாது, எலலோரும எல்லாமும் பெற்று இ[illegible]ய வாழவேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்தை எடுத்துரைத்தவர் அந்த மகா ஞானி. மனிதகுலம் வறுமையால் வாட்டமடைவதைக் கண்டு தெய்வத்தையே படுமோசமாக சாடுகிறார்.

**"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற் யான்"** இதிலிருந்து நாம் என்னத்தைக் காண்கிறோம்; வறுமை கொடிது என்பதை எடுத்துரைக்கிறார். மனிதன் உழைத்து உன்னத வாழ்வு வாழவேண்டும் என்பதை நமக்கு சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

வறுமையை வள்ளுவர் மட்டும் கண்டிக்கவில்லை; ஒருபடி மேலே சென்று ஔவையார் எடுத்துரைக்கிறார்.

**"கொடிது கொடிது வறுமை கொடிது**
**அதனிலும் கொடிது இளமையில் வறுமை**
**அதனிலும் கொடிது ஆற்றொணா கொடுநோய்**
**அதனிலும் கொடிது அன்பிலாப் பெண்டிர்**
**அதனிலும் கொடிது அவர் கையால் உண்பது"**

என்று வெகு தெளிவாக விளக்குகிறார். என்னைப் பொறுத்தமட்டில் மனிதனை மனிதனாக வாழவிடாது மிகவும் சஞ்சலத்தில் சஞ்சரிக்க வைக்கும் இரண்டு கொடிய அம்சமான வறுமையும், கடனும் ஆகும். இவை இரண்டிற்கும் இடையில் மனிதன் அகப்பட்டு விட்டால் அவன் படும் துயரத்தை, துன்பத்தை, இன்னலை, இக்கட்டான வாழ்க்கையை வர்ணிப்பதற்கு என்னிடம் வார்த்தை இல்லை. சில நண்பர்கள் விதியின் சதியில் அகப்பட்டு அதிலிருந்து [illegible]முடியாமல் திவால் (Bankruptcy) ஆகியிருப்பதைக் கண்டு மனம் நொந்து [illegible]து ரத்தக் கண்ணீர் வடித்துள்ளேன். ஒருவருக்கு வரும் துன்பம் அவரை மட்டுமன்றி அவரைச் சார்ந்துள்ளவர்களையும் சூழ்ந்து கொடுமைப்படுத்துகிறது. இதிலிருந்து தெளிவாகிறது பொருளாதாரம் மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் அதை நமது உயிரிலும் மேலாக கண்ணின் மணியாக பாதுகாக்கா விட்டால் நாமும் நம்மைச் சூழ்ந்தவர்களும் வறுமை, கடனில் மூழ்கி மீளமுடியாது வாழவேண்டி வரும்.

எட்டுத் திக்கும் வென்ற இலங்காபுரி மன்னன் இலங்கேஸ்வரனின் தோல்வி நிலையைக் கண்டு அவன் துயரத்தை கம்பர் வர்ணிக்கும் போது எப்படி வர்ணிக்கிறார்? **"கடன்பட்டார் நெஞ்சம் போல்**
**கலங்கினான் இலங்கை வேந்தன்"** இதிலிருந்து தெரிகிறது கடன் பட்டவர்களது மனம் எப்படிக் கலங்கும் என்று. ஆகவே நான் சொல்லிக் கொள்ளும் அறிவுரை நாம் ஒரு புதிய நாட்டிற்குப் போனால் அதுவும் செல்வந்த நாட்டிற்குப் போனால் ஒவ்வொரு அடியையும் மிகவும் சிந்தித்து நிதானமாக வைக்கவேண்டும். அதையே வள்ளுவர் கூறுகிறார்;

**"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்**
**எண்ணுவ மென்ப திழுக்கு."** எதையும் 10 தடவை சிந்தித்து 1 தடவை செய்யுங்கள். அதைவிடுத்து 1 தடவை சிந்தித்து உடனடியாக செயல் பட்டு தோல்விகண்டு வறுமை, கடன், நோயில் சிக்குண்டு வாடிவதங்காதீர்கள்.

*(தொடரும்)*


6 வருடமாக இயங்கிவரும் ஸ்தாபனம்

**அப்சராஸ்**



**RESTAURANT & CATERING**

* கொத்துரொட்டி எல்லா வகைகளும் $3.50 **(TAKE-OUT ONLY)**
* வாழை இலைச் சாப்பாடு $6.00 ( " )
* "மண்வாசனை" வாழை இலைச் சாப்பாடு
* எல்லாவகையான வைபவங்களிற்கும்

அழையுங்கள் (416) **412-6164**



**2778 Kennedy Road, Scarborough, Ont. (Kennedy/Finch)**




**AIRPORT SERVICE & MOVING VAN**

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு



☎: (416) **759-0557**





**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

குடிவரவுச் சட்டம்
**Immigration Law**


**குற்றவியல் சட்டம்**
**Criminal Law**

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை - Permanent Resident
குடியுரிமை - Citizenship
குடும்ப ஒன்றிணைவு - Family Sponsorship

பாதிக்கப்படலாம்.



***வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?***

அடுத்து செய்யவேண்டியது என்ன?



முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...

**பின் இவரை அழையுங்கள்...**

**எஸ்.கே. தீசன்**
**(416) 631-6322**



**விளம்பர வினாடி வினா**

*இந்தப் போட்டி நிகழ்ச்சி பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மாலை 7:30 மணியளவி 24 மணிநேர தமிழ் வானொலியில் கேட்கலாம்*

*இப்போட்டியின் நோக்கம் - "தமிழ் மக்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"*

பெயர் - விளம்பர வினாடி வினா!
நிகழ்ச்சி - ½ மணி நேரம்
பரிசு - $25 பெறுமதியான பத்திரம் (Voucher)

குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பாவிக்க முடியும்

நிபந்தனைகள் -

1. 10 கேள்விகள் கேட்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

குறிப்பு

1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம் பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற் பட்டதாக இருப்பினும் விளம்பரம் பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.

பரிசு வழங்கும் நிறுவனம்

இந் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுபவர்களிற்கு சபோனா ஸ்தாபனத்தில் பாவிக்க கூடிய பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும் $25 பெறுமதியானவை.

# விளையாட்டுத் தகவல்கள் (35)

எஸ். கணேஷ்



## GO JAYS GO!!!
## BASEBALL - BLUEJAYS

World Champion பட்டத்தை 2 வருடங்கள் தொடர்ந்து பெற்ற Blue Jayes இவ்வருடம் Play-Offக்கு போவார்களா என்ற எதிர்பார்ப்பு தற்போது Toronto வில் பலரிடம் ஏற்பட்டுள்ளது. இவ் எதிர்பார்ப்பிற்கு மெருகூட்டுவது போல் Blue Jays தற்போது திறமையாக விளையாடி வருகின்றார்கள். கடந்த 24 ஆட்டங்களில் 19 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளனர். May மாதமும், ஜுன் மாதமும் Jays இன் பெறுபேறுகள் சற்று குறைந்தே காணப்பட்டன. ஆனால ஜுலை மாதத்தில் அனேகமான ஆட்டங்களில் Jays தமது திறமையாலே எடுத்துக் காட்டியுள்ளனர். Baseball Season தொடங்கும் பொழுது CY Young Award வீரர் ஆன Roger Clements யை New York Yankees க்கு Trade பண்ணும் போது Baseball ரசிகர்கள் எல்லோரும இதனை விரும்பவில்லை. அச்சமயம் Yankees இல் இருந்து Dave Wells. Lloyd. Bush ஆகிய மூன்று வீரர்கள் Jaysக்கு தருவிக்கப்பட்டனர். ஆனால் இம்மூன்று வீரர்களின் பெறுபேறுகளையும் பார்க்கும் போது உண்மையிலேயே Jay இன் அதிபர் Gord Ash திறமையாக காரியத்தை முடித்து விட்டார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. இதற்கும் ஒருபடி மேல் போய் Plesac க்கை கொடுத்து Batista யை Trade பண்ணினார்கள். ஏனெனில் Alex Gonzalez காயம் பட்டுள்ளதால், ஆனால் Batista இதுவரை Trade பண்ணிய பின்பு 13 Home Runsல் 32 RBI யையும் Jays க்காக பெற்றுள்ளார். ஆகவே இம்முறையும் Gord Ash திறமையாக காரியத்தை முடித்துள்ளார்.

Major League Baseball இல் மொத்தமாக 30 கழகங்கள் விளையாடுகின்றன. இது இரண்டு பிரிவாக பிரிக்கப்படுகின்றது. ஒன்று American League மற்றையது National League. இவ் இரு League க்களும் மேலும் 3 பிரிவாக பிரிக்கப்படுகிறது. அவையாவன East. Central. West Division ஆகும். இம்மூன்று பிரிவுகளிலும் இருந்து Top Team அதாவது East Division Champion. Central. West. Division Champions என மூன்று Teams எடுக்கப்பட்டு தலா இரு League இல் இருந்து ஒவ்வொரு Division Champions ஆக 6 Teams எடுக்கப்படும். அத்துடன் அமெரிக்கன் League லும் National League லும் இருந்து ஒவ்வொரு Team WILD-CARD ஆக எடுக்கப்பட்டு இவ்விரு Teamsம் முதல் 6 Teams உடன் சேர்க்கப்பட்டு மொத்தமாக 8 Teams Play-Off ல் கலந்து கொள்ளும்.

தற்போது Jays விளையாடும் American League இல் New York முதலாவது இடத்திலும் Jays இரண்டாவது இடத்திலும் உள்ளது. Jays தொடர்ந்து இப்படியாக விளையாட்டினால

### American League

| TEAM | W | L | Pct. | GB | P10 | Stk. | Home | Div. | Int |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **East Division** | | | | | | | | | |
| New York | 60 | 37 | .619 | — | 8-2 | W-6 | 34-20 | 21-6 | 9-9 |
| Toronto | 56 | 46 | .549 | 6½ | 9-1 | W-2 | 33-21 | 18-18 | 9-9 |
| Boston | 53 | 46 | .535 | 8 | 3-7 | L-1 | 30-21 | 15-16 | 6-12 |
| Baltimore | 45 | 53 | .459 | 15½ | 8-2 | W-6 | 24-24 | 8-25 | 11-7 |
| Tampa Bay | 42 | 58 | .420 | 19½ | 3-7 | W-1 | 19-29 | 19-16 | 4-14 |
| **Central Division** | | | | | | | | | |
| Cleveland | 59 | 40 | .596 | — | 2-8 | W-1 | 30-21 | 24-11 | 9-9 |
| Chicago | 46 | 51 | .474 | 12 | 4-6 | L-2 | 23-28 | 14-16 | 9-9 |
| Detroit | 42 | 58 | .420 | 17½ | 6-4 | L-1 | 25-30 | 12-16 | 8-10 |
| Minnesota | 40 | 58 | .408 | 18½ | 6-4 | L-2 | 21-30 | 13-20 | 10-7 |
| Kansas City | 40 | 58 | .408 | 18½ | 5-5 | W-1 | 19-27 | 17-17 | 6-12 |
| **West Division** | | | | | | | | | |
| Texas | 58 | 40 | .592 | — | 9-1 | W-8 | 27-17 | 15-12 | 10-8 |
| Oakland | 51 | 48 | .515 | 7½ | 6-4 | W-1 | 31-16 | 12-15 | 12-6 |
| Seattle | 47 | 51 | .480 | 11 | 5-5 | W-1 | 24-23 | 13-14 | 7-11 |
| Anaheim | 42 | 56 | .429 | 16 | 0-10 | L-11 | 20-24 | 14-13 | 6-12 |

### National League

| TEAM | W | L | Pct. | GB | P10 | Stk. | Home | Div. | Int |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **East Division** | | | | | | | | | |
| Atlanta | 61 | 41 | .598 | — | 4-6 | W-2 | 31-18 | 21-12 | 9-9 |
| New York | 60 | 41 | .594 | ½ | 8-2 | W-6 | 30-21 | 24-14 | 12-6 |
| Philadelphia | 54 | 45 | .545 | 5½ | 6-4 | W-1 | 27-23 | 17-15 | 11-7 |
| Florida | 39 | 61 | .390 | 21 | 5-5 | L-1 | 21-32 | 11-24 | 11-7 |
| Montreal | 36 | 60 | .375 | 22 | 3-7 | W-1 | 22-31 | 13-21 | 8-10 |
| **Central Division** | | | | | | | | | |
| Houston | 59 | 40 | .596 | — | 7-3 | W-4 | 33-21 | 17-20 | 12-3 |
| Cincinnati | 55 | 41 | .573 | 2½ | 5-5 | W-2 | 24-27 | 19-14 | 7-8 |
| St. Louis | 50 | 49 | .505 | 9 | 6-4 | W-4 | 22-26 | 16-16 | 7-8 |
| Pittsburgh | 48 | 51 | .485 | 11 | 4-6 | L-1 | 28-21 | 15-18 | 7-8 |
| Milwaukee | 47 | 51 | .480 | 11½ | 4-6 | L-4 | 16-26 | 19-17 | 8-6 |
| Chicago | 46 | 51 | .474 | 12 | 3-7 | L-4 | 22-20 | 15-16 | 6-9 |
| **West Division** | | | | | | | | | |
| Arizona | 54 | 46 | .540 | — | 6-4 | L-1 | 31-19 | 16-13 | 7-8 |
| San Francisco | 53 | 46 | .535 | ½ | 3-7 | L-2 | 32-21 | 18-13 | 7-8 |
| San Diego | 49 | 49 | .500 | 4 | 4-6 | L-4 | 30-19 | 21-16 | 11-4 |
| Colorado | 44 | 54 | .449 | 9 | 3-7 | L-3 | 24-23 | 19-21 | 4-8 |
| Los Angeles | 44 | 54 | .449 | 9 | 4-6 | W-1 | 22-26 | 12-23 | 8-7 |

நிட்சயமாக Wild-Card Position க்கு தகுதி பெறும். இரு League க்களிலும் உள்ள Teams இன பெறுபேறுகளை இங்கு பார்ப்போம்.
மேலே கூறியவாறு ஒவ்வொரு Division இலும் இரண்டாவது இடத்தில் உள்ள திறமையான Average உள்ள Team - Play Offs க்கு தகுதி பெறும். இதில் ஒரே ஒரு Team மட்டுமே தகுதி பெறும். மேல் கூறிய Wild Card Race இல் தற்போது Blue Jays முதல் இடத்தில் உள்ளது. தற்போது விளையாடுவது போல் திறமையாக விளையாடும் Blue Jays நிட்சயமாக Play Offக்கு தகுதி பெறும்.

முக்கியமாக இவ்வருடம் Manager ஆக கடமையாற்றும் Jim Fregosi தனது தனிப்பட்ட திறமைகளை பாவித்து Blue Jays யை சிறப்பாக விளையாட வைத்துள்ளார் என்றால் மிகையாகாது. சென்றவருடம் Philadelphia Team இல் இருந்து Blue Jaysக்கு Manager ஆக மாற்றப்பட்டார். Player's Coach என வர்ணிக்கப்படும் இவர் Blue Jays இன் திருப்பு முனைக்கு முக்கிய ஒரு காரணமாகும். மற்றும் இவ் வருடம் Shawn Green 1993 ஆம் ஆண்டு Jhon Olrued ஏற்படுத்திய 26 Higting Striks யை முறியடித்துள்ளனர். இவ்வருடம் Tony Fernandez. Shawn Green. Carlos Delgedo ஆகியோரின் ஆட்டங்கள் மிக சிறப்பாக உள்ளன. அத்துடன் Pitchers வரிசையில் Carpenter. Wells. Hentgen உடன் புதிதாக Fracatore இணைந்துள்ளனர். Fracatore இதுவரை 6-0 ஆறு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 2.12 ERA யில் முதல் இடத்தில் உள்ளார். அத்துடன் இவ்வருடம் Reliver ஆன Paul Quantrill லும் தனது பங்கை சிறப்பாக செய்து வருகிறார். சென்ற வருடம் பல ஆட்டங்களில் Jays தோல்வி கண்டமைக்கு காரணம் திறமையான Reliverம் Closerம் இல்லாமையே ஆகும். இவ்வருடம் Closer பதவியில் Koch மிகவும் சிற எறிந்து இதுவரை 19 Saves யை Jayக்கு ஏற்படுத்தி உள்ளார். இவரின் பந்துகளின் வேகம் சராசரி 100m/hour, இவரின் சிறப்பான வேக பந்துகளே பல ஆட்டங்களில் Jayக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளன.

தற்போது Wild - Card Race இல் பலத்த போட்டி நிலவுகின்றது.

| | வெற்றி | தோல்வி | சராசரி | GB |
|---|---|---|---|---|
| Toronto | 56 | 46 | .549 | - |
| Boston | 53 | 46 | .535 | 1½ |
| Oakland | 51 | 48 | .515 | 3½ |
| Seatile | 47 | 51 | .480 | 7 |
| Chicago | 46 | 51 | .474 | 7½ |


பூச்சிகளை அழிக்கவே முடியாதா?
PEST CONTROL

* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* எறும்புகள் * சிலந்திகள்



போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.



(416) 892-4994
7 நாட்களும் அழைக்கலாம்



* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்.
* ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்.
* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.
* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.



RAAJ WATCH WORK



சகல விதமா[ன] மணிக்கூடுகளு[ம்] (Watch & Clock) குறை[ந்த] கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையி[ல்] திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபன[ம்]
NATHAN ☎: (416) 265-558
2885 LAWRENCE AVE. EAST, BRIMLY/ LAWRENCE (Close to Biwa[y]


## குவாற்றமாலா (Guatemala)

(1ம் பக்க தொடர்ச்சி)

*இருபத்திரண்டு திணைக்களங்களாக உருவாக்கப்பட்டு ஜனாதிபதி, உப-ஜனாதிப[தி] மந்திரிசபை என குறிப்பிட்ட அதிகார வர்க்கத்திற்கு இடையில் நடை[பெறும்] நிர்வாகத்தில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாக்குரிமை உண்டு. கோப்பி. கரும்பு. வாழைப்பழம் ஆகியன உற்பத்தி செய்யும் விவசாய நாடாகும்.*

*எரிமலைகள், பூகம்பங்கள். மண் சரிவுகள் என ஆபத்தான சூழல் சுற்றாடலை கொண்ட இந் நாட்டில் மலேரியா. போலியோ போன்ற தொற்று நோய்கள உருவாகும் சந்தர்பங்கள் உண்டு.*

### சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
### பழையமாணவா / ஆசிரியர் சங்கத்தின் ஒன்று கூடல்:கனடா கிளை

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் / ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் கோடைகால ஒன்று கூடலும் அடுத்த மாதம் (ஆகஸ்ட்) 7-ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை (Morningside Park Flat 3)

16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் மற்றும் பல் சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெறுவதுடன் மத்திய போசன உணவும் வழங்கப்படும். அனைத்துப் பழைய மாணவர்கள் / ஆசிரியர்கள் தத்தம் குடும்பத்தினருடன் தவறாது கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். வருகை தருபவர்கள் ஜுலை 31ம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

ந. இரவீந்திரன் 416 292-2498/289-9704 K. தர்மரத்னம் 416 635-1337
T. ரத்னராஜா 905 281-3206 பெர்ணான்டோ ஆசிரியர் 416 636-2172

**இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் Blue Jays முக்கிய வீரர்களின் பெறுபேறுகளை இங்கு பார்ப்போம்.**

**Hitting**

| வீரர்களின் பெயர் | hits | Homeruns | RBI | சராசரி விகிதம் |
|---|---|---|---|---|
| Tony Fernandez | 115 | 5 | 60 | .356 |
| Shawn Green | .122 | 29 | 84 | .330 |
| Stewart | 130 | 9 | 48 | .312 |
| Fletcher | 68 | 10 | 45 | .301 |
| Batista | 39 | 13 | 32 | .271 |
| Carlos Delgado | 100 | 25 | 88 | .256 |
| Cruz | 66 | 9 | 32 | .228 |

**Pitching**

| வீரர்களின் பெயர் | வெற்றி | தோல்வி | ERA | Saves |
|---|---|---|---|---|
| Frascatore | 6 | 0 | 2.12 | - |
| Roch | 0 | 1 | 2.08 | 19 |
| Quantrill | 1 | 1 | 2.14 | 1 |
| Lloyd | 5 | 3 | 3.21 | 3 |
| Carpenter | 7 | 5 | 3.45 | - |
| Halladay | 7 | 3 | 3.66 | 1 |
| Wells | 11 | 6 | 4.80 | - |
| Hentgen | 6 | 7 | 5.30 | - |
| Escobar | 8 | 7 | 6.10 | - |

மேற்காணப்படும் தரவுகளை நோக்கும் போது Jays சென்ற வருடத்திலும் பார்க்க இவ்வருடம் திறமையாக விளையாடுகிறார்கள். ஆனால் பொறுத்திருந்து பார்ப்போம். இவ் வருடம் World Series யை Toronto க்கு கொண்டு வருவார்களோ என்பதை??

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*-தொகுத்துத் தருபவர் - பரம்*

**1963**

| | |
|---|---|
| 1. அன்னை இல்லம் | 2. அறிவாளி |
| 3. ஆசை அலைகள் | 4. ஆயிரங்காலத்துப்பயிர் |
| 5. ஆனந்த ஜோதி | 6. இருவர் உள்ளம் |
| 7. இதயத்தில் நீ | 8 இது சத்தியம் |
| 9. இரத்தத் திலகம் | 10. ஏழைப்பங்காளங்காளன் |
| 11. கல்யாணியின் கணவன் | 12. கடவுளைக் கண்டேன் |
| 13. கற்பகம் | 14. கலையரசி |
| 1[illegible] [illegible]ட்டு ரோஜா | 16. காஞ்சித் தலைவன் |
| 1[illegible] [illegible]ங்குமம் | 18. குலமகள் ராதை |
| 19. குபேரத் தீவு | 20. கைதியின் காதலி |
| 21. கொஞ்சும் குமரி | 22. கொடுத்து வைத்தவள் |
| 23. சித்தூர் ராணி பத்மினி | 24. தர்மம் தலைகாக்கும் |
| 25. துளசி மாடம் | |
| 26. நான் வணங்கும் தெய்வம் | |
| 27. நானும் ஒரு பெண் | |
| 28. நினைப்பதற்கு நேரமில்லை | |
| 30. நீதிக்குப்பின் பாசம் | 31. நெஞ்சம் மறப்பதில்லை |
| 32. பணத் தோட்டம் | 33. பரிசு |
| 34. பார்மகளே பார் | 35. புனிதவதி |
| 36. புரட்சிவீரன் புலித்தேவன் | 37. பெண் மனம் |
| 38. பெரிய இடத்துப் பெண் | 39. மணி ஓசை |
| 40. யாருக்குச் சொந்தம் | 41. லவ குசா * (வர்ணப்படம்) |
| 42. வானம்பாடி | |

இவ்வாண்டு மொத்தமாக 42 படங்கள் வெளிவந்தன. 'லவகுசா' சிறந்த வர்ணப்பட்மாக வெளிவந்தது என்பது சினிமா ரசிகர்கள் அறியக்கூடியது. இவ்வாண்டு வெளிவந்த 'நானும ஒரு பெண்' படத்திற்கு தேசிய விருதாக வெள்ளிப்பதக்கம கிடைத்தது. மற்றும் சென்னை சினிமா ரசிகர் சங்கமும் 1963ம் ஆண்டிற்குரிய சிறந்த படமாகவும் தெரிவு செய்தது. இதே ஆண்டு **A.V.M.** ராஜனும், K.R. விஜயாவும புதுமுகமாக் முறையே 'நானும ஒரு பெண்', 'கற்பகம்' என்ற படங்கள் மூலம் திரைவானில சஞ்சரிக்க தொடங்கினார்கள். இவ் ஆண்டிற்குரிய சிறந்த நடிகர் ஜெமினிகணேசன் (கற்பகம்) சிறந்த நடிகை விஜயகுமாரி (நானும் ஒரு பெண்) தெரிவு செய்யப்பட்டார்கள்.

1963ம் ஆண்டு வெளிவந்த 42 படங்களில் 100 நாட்கள் திரையில காண்பித்து விழாக்கள கொண்டாடிய படங்கள் 'அன்னை', 'ஆலயமணி', 'இருவர் உள்ளம்', பெரிய இடத்துப் பெண், 'நானும ஒரு பெண்', 'பாதகாணிக்கை' இலங்கையில் 100 நாட்கள ஓடியது.


'பணத்தோட்டம்' -சரோஜாதேவியுடன்


'கொடுத்து வைத்தவள்' - ஈ.வி. சரோஜாவுடன்

# நான் வாழப் போகிறேன்



## சுவடு 34 (தொடர்ச்சி)

-வீணை மைந்தன்

பொற்காலத் திரைக் காவியங்களுள் 'சிவாஜி - சாவித்திரி' இருவருக்கும் மிகவும் சவாலாகவும் புகழ் சேர்த்தும் கொடுத்த படங்களுள் 'நவராத்திரி' 'பாசமலர்' 'கை கொடுத்த தெய்வம்' ஆகிய மூன்று திரைப்படங்களும் மிக முக்கியமான பாத்திர வலிமை மிக்க திரை ஓவியங்களாகும்.

'பாசமலர்' என்ற தமிழ்ச் சொல்லே தமிழை நேசிப்பவர்களின் அகராதியில் சகோதர பாசத்தை விளக்கும் புதிய வார்த்தைப் பிரயோகமாகிவிட்டது. 'பாசமலர்' திரைக் காவியத்திற்கு வசனம் தீட்டிய திரு. ஆரூர்தாஸ் அவர்களைப் பற்றியும் உணர்வுகளுக்கு மெருகூட்டிய 'நடிகர் திலகம்' 'நடிகையர் திலகம்' பங்கேற்ற சிறப்பான காட்சிகள் பற்றியும் எழுதிக் கொண்டேயிருக்கலாம்.

## சுவடு 35

'நடிகர் திலகம்' அவர்களுக்கிணையாகப் புகழ்பெற்ற 'நடிகையர் திலகம்' திருமதி. சாவித்திரி அவர்கள் சிவாஜி அவர்களுடன் இணைந்து நடித்த திரைப்படங்கள் வரிசையிலே குறிப்பாகப் "பெண்ணின் பெருமை' 'நவராத்திரி' ' பாசமாலர்' 'கைகொடுத்த தெய்வம்' ஆகிய படங்கள் சிறப்புமிகு திரைச்சித்திரங்களாகும்.


'பெண்ணின் பெருமை' (1956)யில் சிவாஜி அவர்கள் முரட்டுத் தனமும் வில்லன் குணமும் நிறைந்த அன்ரி ஹீரோவாகப் பாத்திரமேற்றிருந்தார். கதாநாயக அந்தஸ்த்துப் பறிபோய்விடுமே என்று கிஞ்சித்தும் கவலைப்படாத தன்னம்பிக்கையும் நடிப்பாற்றல் இரசிகர்களைத் தன்பால் ஈர்த்திழுத்து வைத்திருக்கும் அபாரத் திறமை மிக்க ஒருவரால் தான் இத்தகைய பாத்திரங்களையும் ஏற்று முத்திரை பதிக்க முடியும்.

அந்த ஒருவர் 'சிவாஜி' தான். 'பெண்ணின் பெருமை' திரைப்படத்தில் சிவாஜியின் மூத்த சகோதரனாக ஜெமினி கணேசன் பாத்திரமேற்றிருப்பார். இவர் ஒரு அப்பாவி. வெகுளி, படிப்பறிவற்றவர். இவருடைய மனைவியாகச் சாவித்திரி வருவார். அண்ணன் என்றும் பாராது ஜெமினியை சிவாஜி இம்சைப்படுத்துவார். துன்பம் கொடுப்பார்; அவமானப்படுத்துவார். தனது கணவனைத் தைரியப்படுத்தியும், படிப்பறிவு சொல்லிக் கொடுத்தும்.... சிவாஜியின் துர்க் குணங்களை எதிர்த்தும் போராடி வெற்றி காணும் பாத்திரம் சாவித்திரியினுடையது. மிக அற்புதமாக இவருக்கு இவர் சளைத்தவரல்லர் என்பது போன்று இருவரும் போட்டி போட்டு நடித்திருப்பார்கள்.

இத்தகைய திறமை வாய்ந்த திருமதி. சாவித்திரி ஒருவரால் தான் நவரசங்களையும் பிரதிபலிக்கும் ஒன்பது பாத்திரப்படைப்புகளை ஏற்று ஒரே படத்தில் நடித்த சிவாஜி அவர் களுக்கிணயாக நடிக்க முடியும். இதை நன்குணர்ந்த இயக்குநர். கதைவசனகர்த்தா கலைஞர் ஏ.பி நாகராஜன் சிவாஜியின் நவரசப் பாத்திரங்களுடன் சாவித்திரியை மோதவிட்டுப் புகழ் சேர்க்க வைத்தார்.

சிவாஜி அவர்கள் ஒன்பது வெவ்வேறு உணர்வுகளுடைய பாத்திரங்களில் தோன்றி நடித்த படம் நவராத்திரி. இது நடிகர் திலகத்தின் நூறாவது படம். படம் வெளியான ஆண்டு 1964.

இப்படம் எங்களூரான காங்கேசன்துறை யாழ் தியேட்டரில் திரையிடப்பட்ட போது எனக்கு வயது பதினெட்டு. எங்களுக்குப் பேரானந்தம். எங்கள் வீட்டில் ஏதோ விசேடம் நடப்பது போல் சிவாஜியின் நூறாவது திரைப்பட வெளியீட்டைக் கொண்டாட முடிவு செய்தோம். என்னுடன் நட்புக் கொள்பவர்களும் அநேகமாகச் சிவாஜி இரசிகர் களாகவே இருப்பார்கள். என் மனைவி காதலியாக இருந்தபோது "நீர் சிவாஜி இரசிகையாக இருந்தால் தான் உம்மை திருமணம் செய்வேன்," என்று நிபந்தனை விதித்தவன் நான். காங்கேசன்துறையில் ஒலி பெருக்கி மணவறைச் சோடினை வாடகைக்கு விடும் பொ. பாஸ்கரன். தையிட்டி சத்தியநாதன், மாங்கொல்லை நவீனன் (இப்போது லண்டனில் பணிபுரிகிறார்) நான் ஆகிய நால்வரும் தியேட்டர் உரிமையாளர் ஹன்டி ராசகாரியார் (கல்விமான், ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் சகோதரர்) மனேஜர். கரம்பன், தளையசிங்கம் ஆகியோரிடத்துச் சென்று எங்கள் விருப்பத்தை வெளியிட்டோம்.





அவர்களுக்கு இது விநோதமாகவும், வேடிக்கையாகவுமிருந்தது. சம்மதம் தந்தார்கள். தெல்லிப்பளை குகன் அச்சகத்தில் ரூபா 18.00 (அப்போது வருமானமில்லாத பள்ளி மாணவனான எனக்கு இது பெரிய தொகை) கொடுத்து சிவாஜி பற்றி நான் எழுதிய சிறப்புத் தகவல்களை அடக்கிய துண்டுப் பிரசுரங்கள் தயாரித்தோம். வாழைமரம், மாவிலைத் தோரணம், செவ்விளநீர்க் குலைகள் என்று தியேட்டர் வாசலில் அலங்காரம் செய்து... அட நமது சிவாஜி நூறுபடங்கள் நடித்து முடித்து விட்டாரே... ஆஹா எவ்வளவு அற்புதமான பாத்திரப் படைப்புகள்...யாம் பெற்ற இன்பம் பெறுக அனைவரும் என்று 'நவராத்திரி' திரைப்பட வெளியீட்டைப் பிரமாதப்படுத்தி தியேட்டரைக் கலகலப்பாக்கி விட்டோம்... சுயநலமில்லாத தூய அன்பை சிவாஜியிடத்தும், நடிப்புக் கலையையும், திரைப்படத் துறையையும் நேசிப்பவர்கள் தான் இப்படியான காரியங்களில் ஈடுபடமுடியும். *(தொடரும்)*


லக்ஷ்மி தொலைத் தொடர்பு

யாழ்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள நேந்த தொலைத் தொடர்பு நிலையத்தில் தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் உறவினர்கள் நண்பர்களுடன் வேண்டிய பொழுது தொடர்புகொள்ள முடியும்

தொடர்புகளுக்கு: நகுலன் (லக்ஷ்மி ரேடர்ஸ்): 011 94 21 2928

YARLCAN
STEAM CLEANING





உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

Tel: 724-9085
Pager : 600 -0335
Cell: 721-9709

கனடா - இலங்கை தமிழர் வர்த்தக சம்மேளனம் வழங்கும்

# 8வது வாணிபவசந்தம் '99

## வர்த்தகக் கண்காட்சியும், கலை நிகழ்ச்சிகளும்

ஆகஸ்ட் 1999 August

SATURDAY **14** — 12:00 NOON TO 9:00PM

# METRO EAST TRADE CENTRE

**(Pickering Flea Market)**

**1899 Brock Road**

அனுமதிக்கட்டணம் $2.00 மட்டுமே

(12வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இலவசம்)

SUNDAY **15** — 10:00 AM TO 6:00 PM

மாபெரும் மலிவு விற்பனை பிரபல நிறுவனங்களுடன்
ஆலோசனைகள், புதிய கண்டுபிடிப்புக்கள்


**பாட்டுக்குப்பாட்டு**

**Saturday Aug, 14, 1999**
**1st Prize** Return Air Ticket to London, England
**2nd Prize** Video Cd Player
**3rd Prize** 10 Tamil Karaoke Cd's

**பாட்டுக்குப் பாட்டு**
**Sun Aug 15, 1999**
3 Valuable prizes

இரு நாட்களும் Shiners இன்
**"இன்னிசை விருந்து"**

ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் 12:00 மணிக்கு
இசைப்பிரியன் வழங்கும்
**"இன்னிசை மழை"**




**Max Tours இன்**
ஆதரவுடன்
இலவச பஸ் சேவை

கென்னடி Subway அருகாமையில்
(சங்கர் அன் கோ முன்பாக)
இருந்து புறப்படும் நேரங்கள்

| சனி Aug. 14, 99 | ஞாயிறு Aug. 15, 99 |
|---|---|
| 11:30 a.m | 10:00 a.m |
| 2:00 p.m | 12:00 Noon |
| 4:30 p.m | 2:00 p.m |
| 6:30 p.m | 3:45 p.m |

# New Kalyani

## Catering & Takeout

உங்கள் நாவுக்கு ருசியூட்டும் வகையில் மிகவும்
சிறந்த முறையிலும் ஒவ்வொரு நாளும் தயாரிக்கப்படும்
பலவகைப்பட்ட உணவு வகைகளை நேரில் வந்து
பெற்றுக் கொள்ளுங்கள்

**292 Markham Road, (Markham & Eglinton)**
**Scarborough, Ont.**

## Tel: (416) 261-9774

**Visit our Booth No: #88**


## சூரியக்குடும்பம் 14 விண்வெளி தருபவர்- கனி

விஞ்ஞான ஆய்வுகளின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகளின்படி சூரியன் பற்றிய பல தகவல்களை இன்று பார்ப்போம். சூரியக் குடும்பத்தின் பிரதானமான அங்கமாக விளங்கும் இந்தச் சூரியன் சுமார் 4.6 பில்லியன் (4,600,000,000) வருடங்களின் முன்னர் எமது பால்வெளி கலக்சியில் தோன்றியது. அன்றில் இருந்து இன்றுவரை உறுதியான வீதத்தில் சக்தியை வெளிவிட்டுக் கொண்டிருக்கும் சூரியனானது இன்னமும் 5 பில்லியன் வருடங்களுக்கு இதே விதம் சக்தியை வெளிவிடும் என்கிறார்கள்.

